**21.01.2026**
**MCOP.No. 124/2023**

**ம.சா.1 திரு . ஆறுமுகம் த/பெ. அண்ணாமலை என்பவரை 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. வாகனத்தை ஓட்டி சென்ற நபர் பெயர் தெரியுமா என்றால் தெரியும். அவர் பெயர் ஜெபஸ்டின் அந்தோணிராஜ் ஆகும். விபத்து நடந்தது 07.06.2019 இரவு 7 மணி என்றால் சரிதான். எனது மனு மற்றும் விபத்து பதிவேட்டில் அவ்வாறு தான் உள்ளது என்றால் சரிதான். நான் சாலை விதிகளை மதிக்காமல் சாலையை கடந்ததால் தான் விபத்து நடந்ததாக விபத்து பதிவேட்டில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் வாகனம் வருவதை கவனிக்காமல் சாலையை கடந்ததால் தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. நான் மெயின் ரோட்டில் சாலை திடிரென கடந்து சென்றேன் என்றும், அந்த பகுதி சாலையை கடக்கும் பாதசாரி பகுதி அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்லியுள்ள ஜெபஸ்டின் அந்தோணிராஜ் வாகனத்தை ஓட்டி வந்ததாரா என்றால் அவர்தான் ஓட்டி வந்தார். அவரது ஓட்டுநர் உரிமம் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விபத்து நடந்து சுமார் 9 மாதங்கள் கழித்து தான் நான் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஜெபஸ்டின் அந்தோணிராஜ் 14.12.2022 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் வாரிசுதாரர்களை இவ்வழக்கில் தரப்பினாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. ஜெபஸ்டின் அந்தோணிராஜ் வாரிசுகள் உள்ளார்களா என்றால் அவரது தாயார் உள்ளார். ஜெபஸ்டின் அந்தோணிராஜ் வாரிசுகளை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்பதால் எனது மனு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டி சென்று விபத்து நடந்த சமயத்தில் அவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும் அதனால் காப்பீடு விதிகளின் படி 2ம் எதிர்மனுதாரிடம் இழப்பீடு கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாரிசுகளை சேர்க்கவில்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரர் வாரிசுகளிடம் இருந்து இழப்பீடு தொகையை திரும்ப கோர முடியாது என்பதால் எனது மனு நிலைக்கத்தக்க தல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது மருத்தவ சான்று கள் முறையாக பெறப்படவில்லை என்பதால் ஏற்புடையதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் வேலை செய்வதற்கான மற்றும்

சம்பளம் பெறுவதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. திருக்கோவிலூர் ஜீவா லாட்ஜில் மேனேஜராக பணி செய்தேன். விபத்தில் ஏற்பட்ட காயத்தால் எனக்கு பகுதியான மற்றும் நிரந்தர ஊனம் எதுவும் ஏற்படவில்லலை என்று சொன்னால் சரியல்ல. வலது காலில் முட்டிக்கு கீழ் பகுதியில் காயம் ஏற்பட்டதால் சரியாக நடக்கமுடியவில்லை. நிரந்தர ஊனம் எதுவும் இல்லை. நான் தற்போது மேற்படி லாட்ஜில் வேலை செய்து வருகிறேனா என்றால் செய்து வருகிறேன். எனக்கு விபத்தினால் வருமான இழப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1 ஆண்டு வேலைக்கு செல்ல முடியவில்லை. பின்னர் தான் வேலைக்கு சென்று வருகிறேன். இந்த விபத்து எனது கவனக்குறைவாலும் அஜாக்கிரதையாலும் நடந்தது என்றும் அதற்கு 2ம் எதிர்மனுதாரரிடமிருந்து இழப்பீடு கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகமானது என்று சொன்னால் சரியல்ல.

மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை - வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.